செ.வெ.எண்:25 நாள்:08.07.2021

கோயம்புத்தூர் மாவட்டம்

**பேரூராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.**

---

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று(08.07.2021) பேரூராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பாக, பேரூராட்சி செயல் அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,**

தமிழ்நாடு அரசு, பேரூராட்சி பகுதிகளில் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. அதன்படி, சுகாதாரமான குடிநீர் வழங்குதல், மழைநீர் வடிகால் அமைத்தல், சாலை வசதிகள், தெருவிளக்குகள் அமைத்தல், தனிநபர்கள் இல்ல கழிப்பிடம் திட்டத்தின் கீழ் கழிப்பிடம் கட்டுதல், உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு மற்றும் அடிப்படை கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இத்திட்டப்பணிகள் மாவட்டத்தில் உள்ள அனைத்து பேரூராட்சிகளுக்கும் சென்றடையும் வகையில் பணிகளை மேற்கொள்ளவும், அப்பணிகளை குறித்த காலத்திற்குள் விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

தற்போது, கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா தொற்றுப்பரவல் மிகக் குறைந்துள்ளது. இனிவரும் நாட்களில் தொற்று பாதிப்பை முழுவதுமாக குறைக்கும் வகையில் பேரூராட்சி பகுதிகளில் கொரோனா தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவேண்டும். மேலும், அதிகளவிலான

பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டும். அதன்மூலம் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை விரைவாக கண்டறிந்து, தொற்றின் தன்மைக்கேற்ப மருத்துவமனை அல்லது சிறப்பு சிகிச்சை மையங்களில் அனுமதிக்கப்பட்டு தொடர் கண்காணிப்பு பணியில் ஈடுபடவேண்டும்.

கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையாக பேரூராட்சி பகுதிகளில் வீடு, வீடாக சென்று களஆய்வு மேற்கொள்ளவும், அத்தியாவசிய தேவையின்றி வெளியில் சுற்றிதிரிபவர்கள், முகக்கவசம் அணியாதவர்கள், சமூக இடைவெளியை பின்பற்றாதவர்களுக்கு அபாராதம் விதிக்கவேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**